# 17 நான் இயேசுவுக்கு உரியவன்

**இயேசு தமது போதனைகளுடனும் வாழ்வின் முன்மாதிரிகளுடனும் அன்பின் அடிப்படையிலும் இறையரசின் பண்புகளை வாழ்வில் எடுத்துக்காட்டினார். திருவிவிலியத்தில் காணப்படும் நிக்கதேமு மற்றும் சமாரியப் பெண் எனும் இரு நிகழ்வுகளின் ஊடாக மேலும் இதனை நாம் இப்பாடத்தில் ஆராய்வோம்.**

***யோவான் 3:1-15, 4:7-10, பிலிப்பியர் 2:1-5, 16***

**இயேசுவும் நிக்கதேமுவும்**

இயேசு தொழுகைக் கூடத்திலும் வேறும் பல இடங்களிலும் போதனை செய்தார். எனவே யூதர்கள் அவரை 'ரபி' என அழைத்தனர். யூதத் தலைவர்களுள் ஒருவரான நிக்கதேமு என்பவர் பரிசேயரும் போதகருமாவர். அவர் ''ரபி , நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் '' என இயேசுவிடம் கூறினார். இயேசுவின் சில போதனைகளை பரிசேயர் ஏற்றுக்கொள்ளவில்லை.

பரிசேயரான நிக்கதேமு இரவில் இயேசுவைச் சந்தித்த நிகழ்விலிருந்து நாம் அறிவது:

- நிக்கதேமுவின் மனதில் காணப்பட்ட ஆன்மீக வினாக்களுக்கு இயேசுவிடம் விடைகளைக் கண்டுபிடிக்க ஆவலாய் இருந்தார் என்பது

- இயேசு இரவிலும் கூட தமது காலத்தையும் ஓய்வு நேரத்தையும் பிறருக்காக அன்புடன் அர்ப்பணித்தார் என்பது

***''ரபி நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாங்கள் அறிவோம். கடவுள் தம்மோடு இருந்தாலன்றி நீர் செய்யும் இவ்வரும் அடையாளங்களை யாரும் செய்ய இயலாது.''***
**யோவான் 3:2**



மேற்படி திருவிவிலியப் பகுதியில் நிக்கதேமு சமூகத்தில் உயர்நிலையில் இருந்த நபராக இருப்பினும், இயேசு இறைவனிடமிருந்து வந்தவர் என விசுவாசித்து, அவருக்கு உயரிய கௌரவத்தை அளித்து, இயேசுவுடன் உரையாட விரும்பினான். இயேசுவின் அன்பினால், பிற்காலத்தில் அவனது வாழ்வு மாற்றப்பட்டது என்பதை இறைவார்த்தை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

### இயேசு அவனுக்கு கூறிய மறுமொழி

"மறுபடியும் பிறந்தாலன்றி எவரும்
இறையாட்சியைக் காண இயலாது
என மிக உறுதியாக உமக்குச் சொல்லுகின்றேன்."
யோவான் **3:3**

''வயதான பின் ஒருவர் எப்படிப் பிறக்க முடியும்? தாயின் வயிற்றில் புகுந்து பிறக்க முடியுமா?'' என்று அவன் கேட்ட வினாவிலிருந்து அவன் இயேசுவின் மறுமொழியைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

இயேசு கூறிய உண்மை சத்தியங்களைக் கற்போம்.

## 'மறுபடியும் பிறந்தாலன்றி' என்பதிலிருந்து

'மறுபடியும் பிறந்தாலன்றி அல்லது தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்த தாலன்றி' என்பதன் மூலம் நாம் எதை விளங்கிக் கொள்ளலாம்? தண்ணீரும் ஆவியும் பழைய ஏற்பாட்டில் ஆன்மீகப் புதுப்பித்தலையும், தூய்மையாக்கலையும் குறிக்கின்றது. இப் பின்னணியில் மறுபடியும் பிறந்தால் புதுவாழ்வைக் குறிக்கும்.

இதிலிருந்து இவ் உலகில் பிறக்கும் மனிதன் பாவத்திற்கு அடிமையாகி இறை உறவிலிருந்து விலகி வாழ்கின்றான். பாவத்திலிருந்து விடுதலை அடைய இயேசு கூறியவண்ணமாக புதுவாழ்வை அடைய வேண்டும்.

## 'இறையாட்சியைக் காண இயலாது என்பதிலிருந்து'

பாவத்தில் வாழும் மனிதர் பல வேளைகளில் இறை உறவை மறந்து வாழ் கின்றனர். அப்போது அவர்கள் அழிவடைகின்றார்கள். ஆனாலும் உண்மையிலேயே மறுபடியும் வாழ்வை புதுப்பித்து, இயேசுவை நேசித்து, அவருடன் நெருங்கி வாழும்போது, திரும்பவும் இவ் உலகில் இறையாட்சியின் உரிமையைப் பெறுவார்கள்.

இயேசு நிக்கதேமுக்கு கூறிய 'மறுபடியும் பிறத்தல்' இதுவாகும். இயேசு ''ஒருவர் மனம்திரும்பி தூயாவியின் ஆசியால் புதுவாழ்வு அடைகின்றான் என்கின்றார். அதா வது, ''தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்'' எனக் கூறுகின்றார்.


## சமாரியப் பெண் ஒருவரும் இயேசுவும்

**வாசித்துப் பார்ப்போம்**

**யோவான் 4:7-10**

யோவான் நற்செய்தி நூலில், இயேசுவுடன் உரையாடிய சமாரியப் பெண்ணின் நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது.
இயேசுவும் சமாரியப் பெண்ணினதும் உரையாடலில் வெளிப்படும் கருத்துக்கள் :

இயேசு:
**"குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும். "**
**யோவான் 4:7**




சமாரியப் பெண்:
**"நீர் யூதர். நானோ சமாரியப் பெண்.**
**நீர் என்னிடம் தண்ணீர் கேட்பது எப்படி?"**
**யோவான் 4:8**

பொதுவாக யூதருக்கும் சமாரியருக்கும் இடையே எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில் யூதரான இயேசு சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்கும் வேளையில் அவள் புதுமை அடைகின்றாள்.

இவற்றில் குறிப்பிடத்தக்கவை:

- இறைவனான இயேசு பாவியான சமாரியப் பெண்ணுடன் கதைத்தல்
- யூத ஆண் ஒருவர் சமாரியப் பெண்ணுடன் கதைத்தல்

இறைவனின் அன்பானது யூதருக்கு மட்டும் உரித்தானது அல்ல என்பதை எடுத்துக் காட்டுமாறு இயேசு செயற்பட்டார். அதே போன்று ஒதுக்கப்பட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமாரியப் பெண்ணிடம் கருணை காட்டினார். மனிதனின் தீய குணங்களை இறைவன் வெறுக்கின்றார் என்பதை இதன் மூலம் இயேசு முன்வைக்கிறார்.


இலவச விநியோகத்திற்காக

இயேசு சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்டதன் மூலம், சமூகத்தில் காணப்பட்ட பகைமையை இறையரசின் அடிப்படையான அன்பால் அகற்ற முடியும் என எடுத்துக் காட்டினார். கிறிஸ்துவின் அன்பானது, இன பேதங்களைத் தாண்டி செயற்படும் அன்பு என நாம் அறிவோம்.

அன்று சமூகத்தில் காணப்பட்ட 'இனம்' பற்றிய மனப்பான்மையால் இயேசு தண்ணீர் கேட்ட சம்பவம் சமாரியப் பெண்ணுக்கு பெரும் வினாவாக அமைந்தது. இவ்வாறான சமூகச் சூழ்நிலையில் இயேசு பிற இனப் பெண்ணிடம் ''நான் கொடுக்கும் தண்ணீர், அதைக் குடிப்பவருக்கு பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வை அளிக்கும்'' என்று உறுதி அளித்தார்.

''கடவுளுடைய கொடை எது என்பதையும், குடிக்கத் தண்ணீர் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால்; நீரே அவரிடம் கேட்டிருப்பீர். அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரை தந்திருப்பார்.'' எனக் கூறினார்.

இதிலிருந்து வெளிப்படும் கருத்துக்கள்:

1. மெசியாவாகிய அவரின் வருகையில் நம்பிக்கை வைத்து அவரை நேசிக்கும் அனைவருக்கும் அவரைக் குறித்த தாகம் ஏற்படும்.
2. அதனை விபரிக்க அவர், மனிதனின் தேவைகளுள் ஒன்றான தண்ணீரை உதாரணமாகக் கொண்டு ஆன்மீக தாகத்தை வெளிப்படுத்துகின்றார்.
3. அதாவது நிலைவாழ்விற்கு இயேசு எனும் வாழ்வு தரும் தண்ணீர் வேண்டும். அதற்கான தாகத்தின் ஊடாக இறையரசின் உரிமையைப் பெற முடியும்.

இயேசுவும் சமாதானமும் தொடர்பாக எம்மில் உருவாகும் தாகம் எமது வாழ்வின் மனப்பான்மைகளை மாற்றுவதற்கு உதவுகின்றது. இதனைப் பின்வரும் திருவிவிலியப் பகுதியிலிருந்து விளங்கிக்கொள்வோம்.

***கிறிஸ்துவிடமிருந்து நீங்கள் ஊக்கம் பெற்றுள்ளீர்களா?***
***அன்பினால் பலன் உண்டா?***
***தூய ஆவியானவருடன் தொடர்பு உண்டா?***
***பிறர் மீது பரிவுள்ளமும் இரக்கமும் கொண்டுள்ளீர்களா?***
***பிலிப்பியர் 2:1***

இவ்வாறாக ஏற்படும் மனப்பான்மை மாற்றமானது, அனைவரினதும் தனிப்பட்ட விருப்புக்களைக் கடந்து கிறிஸ்துவில் நிலைக்கும் மனப்பான்மையான மாற்றமாக அமைய வேண்டும். அது நிக்கதேமு மற்றும் சமாரியப் பெண்ணுடன் இயேசு உரையாடியதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது. கீழ்வரும் திருமறைப்பகுதி அதனை மேலும் வலியுறுத்துகின்றது.

***அவ்வாறான வாழ்வுக்கு தூயாவியின் ஒத்துழைப்பும் பிறர் மீது***
***அன்பும் நட்பும் தோன்றும்.***
***அப்படியானால் நீங்கள் ஒரே எண்ணமும் ஒரே அன்பும் ஒரே உள்ளமும்***
***கொண்டவராய்த் திகழ்ந்து ஒரு மனத்தவராயிருந்து***
***என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்.***
***கட்சி மனப்பான்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம் தர வேண்டாம்.***
***மனத்தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள்.***
***நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல பிறரைச்***
***சார்ந்தவற்றிலேயே***
***அக்கறை கொள்ள வேண்டும்.***
***பிலிப்பியர் 2:2-4***

இவ்வாறாக இயேசுவுடன் தனிப்பட்ட உறவில் நாம் இணையும்போது எமது வாழ்வு இருள் நீக்கப்பட்டு ஒளிவீசும் தாரகையாக ஒளிரும்.

***‘குற்றமும் கபடும் அற்றவர்களாய் கடவுளின்***
***மாசற்ற குழந்தைகள் எனத் திகழ்வீர்கள். உலகில்***
***ஒளிரும் சுடர்களாகத் திகழ்வீர்கள்.’***
***பிலிப்பியர் 2:16***

தாரகையால் வெளிவரும் சிறு ஒளியும் இருளில் பெறுமதியான ஒளியாகும். இவ்வாறு உலகில் ஒளிதரும் தாரகையாக ஒளிவீசி நாம் வாழ்ந்திட முயற்சி செய்வோம்.

**செயற்பாடு**

01. தாரகையின் சிறு ஒளி இருளில் பெறுமதிமிக்க ஒளி'' என்பதன் பொருளை விளக்குக.

02. இயேசுவுடன் உறவு கொள்ள உங்களில் வளர்ச்சியடைய வேண்டிய பண்புகள் 5 எழுதுக.


இலவச விநியோகத்திற்காக